செ.வெ.எண் : 06/ ஏப்ரல் நாள் : 05.04.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கும் பணிகள்

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

சட்டமன்ற பொதுத் தேர்தல் வாக்குப்பதிவை முன்னிட்டு இன்று (05.04.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், வாககுச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்ட தேர்தல் தளவாட பொருட்களை மண்டல குழுவினர் மூலம் அனுப்பி வைக்கும் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

குறிப்பாக பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் அனுப்பி வைக்கும் பணிகளையும், பரமக்குடி ஆயிர வைசிய மேல்நிலைப்பள்ளி மற்றும் கமுதி சத்திரிய நாடார் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பணி ஆணை வழங்கும் பணிகளையும் நேரில் ஆய்வு செய்தார்கள்.

சட்டமன்ற தொகுதிகளுக்கான பொதுத்தேர்தல் பார்வையாளர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) திரு.சொராப் பாபு,இ.ஆ.ப., (Thiru.Sorabh Babu, I.A.S.,) அவர்கள், (பரமக்குடி) திரு.விசோப் கென்யே, இ.ஆ.ப.,(Thiru.Wezope Kenye, I.A.S.,) அவர்கள் ஆகியோர் உடனிருந்தார்கள்.

தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு 06.04.2021 (நாளை) நடைபெற உள்ளது. மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் 5,79,908 ஆண் வாக்காளர்கள், 5,85,189 பெண் வாக்காளர்கள், 63 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 11,66,791 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 80 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் 20,951 நபர்கள், மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்கள் 10,738 நபர்கள்உள்ளனர். மொத்தம் 1,647 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அனைத்து மையங்களிலும் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்களின் வசதிக்காக சாய்வு தளம் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. அதில் 228 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டு கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் 7905 வாக்குச்சாவடி அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். பாதுகாப்பு பணியில் 412 துணை இராணுவ வீரர்கள், 2158 காவலர்கள், 271 முன்னாள்படை வீரர்கள், ஊர்காவல் படையினர், ஓய்வு பெற்ற காவல்துறை அலுவலர்கள் என 3000க்கும் மேற்பட்ட அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேலும், கொரோனா வைரஸ் பரவலை கருத்தில் கொண்டு அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1729 தெர்மல் ஸ்கேனர் கருவிகள், சானிடைசர் திரவம் 500 மிலி அளவில் 11,500 பாட்டில்கள், 100 மிலி அளவில் 18,000 பாட்டில்கள், 13,91,000 கையுறைகள் (Disposable Polyethylene gloves), 50,000 Latex ரப்பர் கையுறைகள், கழிவு மேலாண்மைக்கான 10,000 PPE பைகள், தேவைக்கேற்ப பயன்படுத்துவதற்காக 50,000 முககவசங்கள் என பாதுகாப்பு உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாவட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 30, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 31, திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 34, முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 35 என மொத்தம் 130 மண்டல அளவிலான தேர்தல் பணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு அலுவலர்கள் மூலம் 05.04.2021 காலை முதல் வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் தளவாட பொருட்களை பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படுகின்றன. அந்தவகையில், தேர்தல் வாக்குப்பதிவை அமைதியான முறையில் நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளன. நாளை தேர்தல் வாக்குப்பதிவு காலை 7.00 மணிக்கு தொடங்கி மாலை 7.00 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**